# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 15.11.2023 ஆம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1) | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளிலும் தூய்மைப்பணிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியும் செயல்முறை கடிதம் எண். 33552./2022/EA2-SWM-2 நாள். 10.01.2023,படி ஜெயசூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் என்கிற வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்திற்கு பணி உத்திரவு நாள். 03.05.2023 முதல் வழங்கப்பட்டு 03.05.2023 அன்று பணி துவங்கப்பட்டது. இப்பணியில் வெளிக்கொணர்வு முகமை தூய்மை பணியாளர்கள் 119 நபர்கள், தூய்மைப்பணி மேற்பார்வையாளர்கள் 6 நபர்கள், ஓட்டுநர்கள் 16 நபர்கள், இப்பணிக்கான வாகனங்கள், தளவாடப்பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கவும், அவர்களுக்கான பணி உத்திரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது இன்றைய தேதி (14.10.2023) வரை போதிய அளவில் பணியாளர்கள், வாகனங்கள், தளவாடப்பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமை நிறுவனத்தாரால் வழங்கப்படவில்லை. இதனால் நகரில் பெருமளவில் திடக்கழிவுகள் ஆங்காங்கே தேங்கி பொதுமக்கள் மற்றும் பொது சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. இதுகுறித்து மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமைக்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின், நேரடி அறிவுரையின்படி ஆய்வுகளில், கடிதங்கள் மற்றும் பல நோட்டீஸ்கள் வழங்கியும் எவ்வித முன்னேற்றமும் பணியில் காண்பிக்கப்படவில்லை.<br>தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியான குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என சேகரமாகும் மையத்திற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் குப்பைகளை தரம் பிரித்தும் மற்றும் வார்டுகளில் குப்பைகள் தேங்காவண்ணமும் பணி மேற்கொள்ள படவில்லை. இதனால் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் பல புகார்கள் வந்த வண்ணமாகவே இருந்தது. இது சம்மந்தமாக, நாள்:27.07.2023, 28.07.2023, 13.09.2023, 20.09.2023, 21.09.2023, 25.09.2023, 12.10.2023, 26.10.2023 சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பலமுறை எழுத்து பூர்வமாக அறிவிப்புகள் வழங்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை பணியில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. மேலும் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு நாளது தேதி வரை (14.11.2023) வெளிக்கொணர்வு எழுத்து மூலமாக விளக்கம் ஏதுவும் அளிக்கவில்லை. |

| | |
|---|---|
| | மேலும் குப்பைகளை தரம் பிரிக்காமல் (Bio-Mining) ல் சுத்தம் செய்யப்பட்ட இடத்திலேயே தரம் பிரிக்காமல் கொட்டியதால் அண்ணா யூனிவர்சிட்டி சென்னை, அவர்கள் வருகையின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பணி தற்போது தேக்கமடைந்துள்ளது. இவர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியினை திறம்பட செய்யாததால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.<br>மேட்டுப்பாளையம் நகராட்சி நீலகிரி மலை மாவட்டத்திற்கு நுழைவாயிலாக அமைந்துள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களும், மிக முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்கின்ற இடமாகும். எனவே நகரின் பொது சுகாதார நலன் கருதியும், பொதுமக்களின் நலன்கருதியும் நகரின் வணிக மேம்படும் நோக்கத்திற்காகவும் தூய்மைப்பணிகளை சீரிய அளவில் தினமும் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேற்படி வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்கள் அளித்தும் தூய்மைப்பணிகளில் முன்னேற்றம் அடையாமல் தற்போது மிகவும் சீர்கெட்டுள்ளது.<br>எனவே இவர்களது ஒப்பந்தத்தை இரத்து செய்யவும், மேலும் இரத்து செய்யப்பட்ட நாளிலிருந்து பொது சுகாதாரப்பணி பாதிப்படையா வண்ணம் பணியினை மேற்கொள்ளவும் ஏற்கனவே மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணிபுரிந்த வெளிக்கொணர்வு முகமை மூலமாக, தற்காலிகமாக இப்பணியினை மேற்கொள்ள, இந்நிறுவனத்திடம் 33 வார்டுகளில் தூய்மை பணியினை மேற்கொள்ளவும் பழைய ஊதிய விகிதத்திலேயே தூய்மைப்பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினத்தையும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை பணியினை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து இச்செலவினத் தொகையை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண்:4481/2023/எச்1)**<br>**தீர்மானம் எண்** : 721<br>**தீர்மானம்** : 1. தூய்மைப் பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை நிறுவனமான ஜெயசூர்யா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு 3.5.23ந் தேதி வழங்கப்பட்ட வேலை உத்திரவினை இரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டது.<br>2. பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி நகர் பகுதிகளில் 33 வார்டுகளில் தூய்மைப்பணி மேற்கொள்ள தூய்மைப் பணியாளர்களின் சுய உதவிக்குழுக்கள் மூலம் மறு உத்தரவு வரும் வரை பணியாளர்களுக்கு KPI ஊதிய அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.<br>3. மேற்கண்ட பணி மேற்கொள்ள வாகனங்கள் வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் செலவினத் தொகை வழங்கவும் அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு "**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்**" தேர்தல் வாக்குறுதியின்படி விளாமரத்தூர் பகுதியிருந்து தூய்மையான குடிநீர் வழங்கும் வகையில் விளாமரத்தூர் குடிநீர் திட்டத்திற்கு திட்ட நிதியான ரூ.22.20 கோடி தொகையினை ஒதுக்கீடு செய்து உத்திரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள், மாண்புமிகு நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.இராசா அவர்கள், ஆகியோர்களுக்கு நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மேட்டுப்பாளையம் நகரத்தின் பொதுமக்கள் ஆகியோர் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>**தீர்மானம் எண்** : -<br>**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது |
| 3 | விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்கள் காலமானதற்கு இரங்கலைத் தெரிவித்து நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**தீர்மானம் எண்** : -<br>**தீர்மானம்** : இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |

ஆணையாளர்
மேட்டுப்பாளையம் நகராட்சி